

பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்தி வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி தலைமை கழக அறிவிப்பின்படி கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஆ.சுதாகர், மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் பிரபு முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாவட்ட பொருளாளர் பிரகாஷ், ஒன்றிய செயலாளர்கள் மன்னவன், அன்பரசு, ரமேஷ், சிபி செந்தில், ஹிமாலயா யுவராஜ், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் சுரேஷ், ரகு துரைராஜ், பேரூர் கழக செயலாளர்கள் கௌதமன், விஸ்வநாதன், எட்டிமடை ஆனந்தகுமார், ஒத்தக்கால் மண்டபம் கார்த்திகேயன், சாமளாபுரம் வேலுச்சாமி, மோப்பிரிபாளையம் சசிக்குமார் உள்பட 300 க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் உதயசூரியன் (27) உடல் நலக்குறைவால் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தகவல் அறிந்து தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் நேரில் சென்று சிகிச்சை குறித்து கேட்டறிந்து ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சுதா. சுர்ஜித்,ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் நரேஷ்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பொன்மணி உள்ளிட்ட தி.மு.க.வினர் உள்ளனர்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்

# அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

## மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமை!

### கவிச்சுடர் கவிதைப்பித்தன் - எம்.எம்.அப்துல்லா - டாக்டர் வை.முத்துராஜா-த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, ஜூலை 1-

பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்திய அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் மாணவரணி சார்பில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை தலைமை தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கழக இலக்கிய அணி துணை தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் கழக அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா, புதுக்கோட்டை துணை மேயரும் வடக்கு மாநகர பொறுப்பாளருமான எம்.லியாகத் அலி, தெற்கு மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ், மாநில கழக நிர்வாகிகள் த. சந்திரசேகர், செ.அசோக் பாண்டியன் மாவட்ட கழக நிர்வாகிகள் அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, கீரை. தமிழ்ராஜா, சி.ஆர். வி.சித்ரா, மாநகர நிர்வாகிகள் அ.ரெத்தினம், மணிவேலன், ரெங்கராஜ், பழனிவேலு, ஒன்றிய செயலாளர் ஆர்.ஆர்.சாமிநாதன், கவிவேந்தன், சி.அரங்கநாயகம், வெற்றிச்செல்வன், வட வாளம் க.செ.மணிமாறன், டி. அப்புக்காளை, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் செ.பிரசன்னா, ர.ரெத்தின சபாபதி, வடக்கு மாநகர மாணவரணி அமைப்பாளர் எஸ்.அஜ்மீர் ராஜா, தெற்கு மாநகர மாணவரணி அமைப்பாளர் ஜி.பிரகாஷ், ஐ.எம்.பால்ராஜ், தமிழினியன், கே.எம்.எஸ்.குமார், கண்மணி சுப்பு, உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக மாணவரணி நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற அனைவரையும் காவல்துறை கைது செய்து திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டு மாலை விடுவித்தனர்.



பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்தியது வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி தலைமை கழக அறிவிப்பின்படி தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு, மாவட்ட தி.மு.க. மாணவர் அணியினர் சார்பில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் துரை.சந்திரசேகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே ன.ஜி. நீலமேகம், து.செல்வம், தலைமை கழக நிர்வாகி சி.இறைவன், மாநகர கழகச் செயலாளர் சண்.இராமநாதன், உள்ளிட்ட கழக முன்னோடிகள் முன்னிலையில் மாணவர் அணியினர் திரளாக பங்கேற்று, போதை அமைச்சருக்கு எதிரான கண்டன கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற அனைவரையும் காவல்துறையினர் கைது செய்தனர்.

### போதைப் பொருள்: அமைச்சர் சரத்குமாரை கண்டித்து

# புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக மாணவர் அணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## ஆ.கலைச்செல்வன் தலைமையில்!

புதுக்கோட்டை ஜூலை 1 -

மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் டி.சரத்குமார் அவர்கள் பொதுவெளியில் போதைப் பொருள் உபயோகப்படுத்தியதை கண்டித்து புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக மாணவர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் அறந்தாங்கி கலைஞர் கருணாநிதி பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன் தலைமை வகித்தார். அறந்தாங்கி நகரச் செயலாளர் க.ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் பொது இடத்தில் போதை பொருளை உபயோகப்படுத்திய தமிழக அரசின் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தியும், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் அறந்தாங்கி முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் உதயம் சண்முகம், ஒன்றியச் செயலாளர் சக்தி ராமசாமி, கே.பி.கே.டி.தங்கமணி, பொன் கணேசன், வே.பொன்துரை, பேரூர் கழக செயலாளர்கள் கே.சி. சிவக்குமார், ஆ. பழனிக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா. ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பாத்திமா பீவி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் ஆவுடையூனுஸ், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் பழனியப்பன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எம்.ஜி (எ) ராமச்சந்திரன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ராஜபெரியண்ணன், ஜெயகிருஷ்ணராஜ், உதயசூரியா, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் தமிழ்ராஜா, துரைராஜ், அன்பழகன், முகமது நலீம், அடைக்கலராஜா, சின்னையா, ஷாஜகான், அல்லி முத்து, தகவல் தொழில்நுட்ப அணி அறந்தாங்கி தொகுதி ஒருங்கிணைப்பாளர் செந்தில்வேலன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் பிரபுராமன், அகிலன், நகர இளைஞரணி அமைப்பாளர் சேக், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ராஜாராம், விக்னேஸ்வரன், அய்யப்பன், நகர,ஒன்றிய நிர்வாகிகள் ராமசாமி, சுப்பிரமணியன், வீரப்பன், கணேசன், பாலசுப்ரமணியன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர்கள் வீராச்சாமி, அக்பர் அலி, ராகேஷ், சரத்,சந்திரசேகர், அறந்தாங்கி நகர அமைப்பாளர் அசோக்,தகவல் தொழில்நுட்ப அணி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் நைனா முகமது, கார்த்தி உள்ளிட்டோரை அனுமதி இல்லாமல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக போலீசார் கைது செய்தனர். பின்னர் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.




ஈரோடு தெற்கு மாவட்ட மாணவரணி சார்பில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தலைமையில் தவெக கட்சி அமைச்சர் பொதுவெளியில் போதைப் பொருள் பயன்படுத்தியதை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஆ.செந்தில்குமார், க.சின்னையன், செல்லபொன்னி, ப. க. பழனிசாமி, இரா. சேகரன், வி.சி.நடராஜன், குறிஞ்சி என்.தண்டபாணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கைதானார்கள்.

# பெரம்பலூரில் ஆர்ப்பாட்டம்!

பெரம்பலூர், ஜூலை 1 -

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்

அமைச்சர் சரத்குமாரை கண்டித்து நேற்று காலை பத்து மணியளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற இருந்த நிலையில் காவல் துறை அனுமதி மறுத்த

காரணத்தினால், மாவட்ட கழக அலுவலகத்தில் இருந்து

ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற 100க்கும் மேற்பட்ட தி.மு.க.வினர், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

### என்.கௌதமன் தலைமை ! த.வெ.க. அரசின்

# அமைச்சர் சரத்குமார் பதவி நீக்கம் செய்யக்கோரி நாகையில் ஆர்ப்பாட்டம்!


நாகை, ஜூலை 1 -

நாகை மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில் பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியது போல் வீடியோ வெளியிட்ட நிர்வாக திறமையற்ற சோபா மாடல் அரசின் த.வெ.க. அரசின் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நாகை அவுரி திடலில் நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப. கோவிந்தராஜன், மாவட்ட கழகப் பொருளாளர் மு.லோகநாதன், கழக மீனவர் அணி துணை செயலாளர் ஜி. மனோகரன், தலைமை கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், மாவட்ட கழக துணை செயலாளர் ஆரூர் மணிவண்ணன், ஒன்றிய செயலாளர்கள் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், என்.சதாசிவம், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், பொதுக்குழு உறுப்பினர் கோ.சிவகுமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பா.உதயகுமார், துணை அமைப்பாளர்கள் எலக்ட்ரிகல் ஆர்.பாலா, செந்தாமரைச்செல்வன், மணிகண்டன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, அ.பாரி பாலன், கேஸ் எஸ்.செந்தில், பெ.முருகானந்தம், ஆர்.ஆர். குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், பாலமுரளி, க.சத்தியமூர்த்தி, சுரேந்தர், மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, நகர,

பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர்மன்ற, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர் முன்னதாக மாவட்ட கழக அலுவலகத்தில் இருந்து மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன் தலைமையில் பேரணியாக புறப்பட்டு அவுரி திடல் வந்தடைந்து. அங்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டம் செய்த கழகத்தினரை காவல்துறையினர் கைது செய்து திருமண மண்டபத்தில் அடைத்து வைத்து பின்னர் இரவு விடுவித்தனர்.



ஈரோடு மத்திய மாவட்ட மாணவரணி சார்பில் பவானி கே.ஏ.சேகர் தலைமையில் த.வெ.க. கட்சி அமைச்சர் பொதுவெளியில் போதை பொருள் பயன்படுத்தியதை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கே.பி.சாமி, எம்.பி.அறிவானந்தம், பவானி கே.சரவணன், சிந்தூரி இளங்கோ, இந்திரஜித் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கைதானார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். கலைச்செல்வன்

### ஜூலை 1 (2018)



இளம்வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தீவிர கழகக் பணியாற்றியவர்.

தேனி மாவட்டம், காக்கில் சிக்கையன்பட்டி கிளைச் செயலாளர், ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, கம்பம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.